# சோமசுந்தரப் புலவர்

ஈழத்துப் புகழ்பூத்த புலவர்களுள் ஒருவராகச் சோமசுந்தரப் புலவர் விளங்கினார். இவர் யாழ்மாவட்டத்திலுள்ள நவாலி என்ற ஊரில் 1878 ஆம் ஆண்டு பிறந்தார். இவரது தந்தையார் பெயர் கதிர்காமர். தாயார் பெயர் இலக்குமிப்பிள்ளை. இவர் தனது தொடக்கக் கல்வியை அருணாச்சலம் ஆசிரியரது பாடசாலையில் கற்றார். அங்கு தமிழ், ஆங்கிலம் ஆகிய மொழிகளை நன்கு கற்றுத் தேர்ந்தார். இவரது தமிழ் ஆங்கில அறிவின் மேன்மையால் வட்டுக்கோட்டைச் சித்தங்கேணியில் அமைந்துள்ள பள்ளியில் ஆசிரியராகப் பணிபுரிந்தார்.

சோமசுந்தரப்புலவர் அப்பள்ளியில் தமிழும் ஆங்கிலமும் கற்பித்தார். இவர் தமிழ், ஆங்கில மொழிகளில் மட்டுமின்றி பாடல் பாடுவதிலும் வல்லவராகத் திகழ்ந்தார். ஏறத்தாழ 1500 தமிழ்ப் பாடல்களை இயற்றியுள்ளார். இவருடைய பாடல்கள் பழமையும் புதுமையும் கொண்டவை. இவர் சிறுவர்களுக்காக எழுதிய பல பாடல்கள் உள்ளன. அவற்றில் பவளக்கொடி, கத்தரிவெருளி, ஆடிப்பிறப்பு, தாடி அறுந்த வேடன் போன்ற பாடல்கள் அனைவராலும் நன்கு அறியப்பட்ட பாடல்களாகவுள்ளன. இவரது இலங்கை வளம் என்னும் பாடல் சிறந்த பாடலாகும். இவரைச் சிறுவர்கள் தங்கத்தாத்தா என அன்புடன் அழைப்பர்.